பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

# Ayothi Dharsan in Kudanthai

**Dr. A. Dhanalakshmi,** Associate Professor of Tamil,
Seethalakshmi Ramaswami College,Tiruchirappalli, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-0741-691
DOI: 10.5281/zenodo.20840075

## Abstract

*At first, human life in nature was difficult. People had no food, no clothes, and no place to live. History tells us this. Early humans lived in mountains, forests, plains, and along riverbanks. They suffered from cold, harsh wind, rain, and the movements of wild animals. We can understand this from historical records and evidence from that time. Over time, humans began living in mountain caves. They also made dwellings on hillsides. Some of these were formed by nature, and others were made by human effort. Stones were set up on four sides to create a living space. That basic structure later took many different forms. Archaeological evidence confirms this. A temple is the house of the gods. A temple reflects the arts, the principles of dharma, beliefs, values, and the way of life honoured under Hinduism. It serves as a connection between humans, the deities, and the cosmic person, all within a sacred place. Hence, this article investigates the evidence of Ayothi Darisanam in Kudanthai.*

**Keywords:** Kattali, Anuviratam, Surudhakeerti, Culture, Bhagavad Siddham

## References

[1] *Arulmigu Ramasami Thirukkoil Thala Varalaru*. Kumbakonam, 1998.
[2] Subramaniyan, S. Ve. *Kambaramaayanam Moolamum Uraiyum*. 1st ed., Manivasagar Pathippagam, 1918.
[3] Venkatasami, Mylai Seeni. *Thamilar Valartha Azhagu Kalaigal*. 1st ed., Pari Nilayam, 1960.
[4] Manickam, A. A. *Kurundhogai Moolamum Uraiyum*. Varthamanan Pathippagam, 1999.
[5] Manickam, A. A. *Maduraikkanji Moolamum Uraiyum*. Varthamanan Pathippagam, 1999.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்



**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*
**Volume 6, Issue 2, May 2026** **E-ISSN: 2583-0880**
**MLA, DOAJ Indexed**

# குடந்தையில் அயோத்தி தரிசனம்

**முனைவர் ஆ. தனலெட்சுமி,** இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-0741-691**

**ஆய்வுச்சுருக்கம்**

*இயற்கையில் மாந்தர் வாழ்வு தொடக்கத்தில் அலைக் கழிக்கப்பட்டு இருந்தது. உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் இன்றி இருந்ததாக மாந்தர் வரலாறு உணர்த்துகின்றது. வரலாற்றில் மனிதனின் இருப்பிடம் தொடக்கத்தில் மலை, காடு, சமவெளி, ஆற்றோரம் என்ற நிலைகளில் ஒடுங்கி வாழ்ந்ததில் பனி, கடும்காற்று, மழை, வனவிலங்குகளின் இயக்கங்களினால் துயரநிலை அடைந்ததை அக்காலத்திற்குரிய வரலாற்று ஆவணங்கள் எனக் கொள்ளத்தகும் சான்றுகள் வழி உணரலாம். இவ்வகையில் காலத்தின் கழிவில் மாந்தர் இருப்பிடங்களாகிய மலைக்குகைகளில் தங்கி வாழ்தலும், மலைச்சரிவுகளில் இயற்கையின் அமைப்புகளிலோ, மாந்தனது முயற்சியாலோ வாழ்விடங்கள் என நான்கு பக்கங்களாலும் கற்கள் நாட்டப்பட்டு வாழ்விடமாக அமைந்தது. அந்த அமைப்பே பிற்காலத்தில் பல்வேறு வடிவங்களில் மாந்தனால் அமைக்கப்பட்டன என்பதற்குத் தொல்பொருள் ஆய்வுத்துறையின் வரலாற்றுச்சான்றுகள் உரைத்து நிற்கின்றன. கோயில் கடவுளரின் இல்லமாகும். ஒரு கோவில் என்பது கலைகளின் தொகுப்பு, தர்மத்தின் கொள்கைகள், நம்பிக்கைகள், மதிப்புகள் மற்றும் இந்து மதத்தின் கீழ் போற்றப்படும் வாழ்க்கை முறை ஆகியவற்றை பிரதிபலிக்கிறது. இது ஒரு புனிதமான இடத்தில் மனிதன், தெய்வங்கள் மற்றும் பிரபஞ்ச புருஷனுக்கு இடையேயான இணைப்பாக செயல்படுகிறது.*

**குறிப்புச்சொற்கள்:** கற்றளி, அனுவிரதம், சுருதகீர்த்தி, பண்பாடு, பகவத் சித்தம்.

## முன்னுரை

தமிழ் மக்களின் கலாசாரம், பண்பாடு, வாழ்கை முறை ஆகியவற்றை தமிழகக் கோயில்களில் தொடர்ந்து பிரதிபலித்து வந்திருக்கின்றன. கற்றளிகள் எனப்படும் கற்கோயில்களின் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் இறுதியில் அரசாண்ட இரண்டாம் நரசிம்மவர்மன் ஆகிய இராசசிம்ம பல்லவன் கால முதல் தொடங்கியது.

> **நீளமாகவும், அகலமாகவும் தேவைக்கேற்பவும் தரித்து எடுத்த கருங்கற்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்படும் கோயிலே கற்றளி. சுண்ணம் சேர்க்காமலே பெரும்பாலும் இக்கட்டடங்கள் அமைக்கப்பட்டன. (தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், ப. 14.)**

நான்கு கார்டினல் திசைகள் ஒரு இந்து கோவிலின் அச்சை உருவாக்க உதவுகின்றன, அதைச் சுற்றி இருக்கும் இடத்தில் ஒரு சரியான சதுரம் அமைக்கப்பட்டுள்ளது. மண்டலத்தின் வட்டம் சதுரத்தை சுற்றி வருகிறது. சதுரமானது அதன் பரிபூரணத்திற்காக தெய்வீகமாகவும், அறிவு மற்றும் மனித சிந்தனையின் குறியீட்டு விளைபொருளாகவும் கருதப்படுகிறது,

## குடந்தை இராமஸ்வாமி கோயில் – அறிமுகம்

குடந்தை - கோயில் நகரம். திரும்பும் திசையெங்கும் கோபுரங்கள் அழகு செய்யும் ஊர். சைவம் வைணவம் ஆகிய இரு சமயங்களின் ஆலயங்களும் நிறைந்திருக்கும் க்ஷேத்திரம்.

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

காசிக்கு நிகரான புனிதமும், அயோத்திக்கு நிகரான சிறப்பும் கொண்ட தலம். கலையும் ஆன்மிகமும் கலந்து செழித்திருக்கும் பூமி. இத்தகைய சிறப்புகள் வாய்ந்த புண்ணிய பூமியான குடந்தையில் நடுநாயகமாகத் திகழ்கிறது இந்த இராமஸ்வாமி திருக்கோயில்.

- **இறைவன் : இராமஸ்வாமி**
- **இறைவி : சீதாலக்ஷ்மி**

கும்பகோணம் இராமசுவாமி கோயில், தமிழ்நாட்டின் கும்பகோணத்தில் அமைந்துள்ள ஒரு வைணவத் திருத்தலம். இது, விஷ்ணுவின் அவதாரமான ராமருக்கு அர்ப்பணிக்கப்பட்ட கோயில். தென்னக அயோத்தி என போற்றப்படும் இந்த கோயில், கும்பகோணத்தின் முக்கிய கோவில்களில் ஒன்றாகும்.

**தென்னக அயோத்தி**

தென்னக அயோத்தி என்று போற்றப்படும் கும்பகோணம் சீதா தேவி சமேத இராமஸ்வாமி கோவில் பற்றி அவசியம் அறிந்து கொள்ள வேண்டும். காசிக்கு நிகரான புனிதமும், அயோத்திக்கு நிகரான சிறப்பும் கொண்ட தலம். கும்பகோணம் கலையும் ஆன்மிகமும் கலந்து செழித்திருக்கும் பூமியான கும்பகோணத்திலுள்ள வைணவத் தலங்களில் முக்கியமான இடத்தைப் பெறுவது இராமஸ்வாமி கோயில்.

**இராமஸ்வாமி கோயில் பெயர் காரணம்**

முடிசூட்டுப் பாணியில் கட்டப்பட்டுள்ளதாலும், ராமர், சீதை மற்றும் லட்சுமணரின் உருவங்களுடன் பரதன் மற்றும் சத்ருக்னரின் உருவங்களும் இங்குள்ளதால், இந்தக் கோயில் "தெற்கு அயோத்தி" என்று அழைக்கப்படுகிறது. வான சங்கமத்தின் தெய்வீகக் காட்சியால் தொலைதூர இடங்களிலிருந்தும் மக்கள் இந்த முடிசூட்டுக் காட்சிக்கு ஈர்க்கப்படுகிறார்கள், இது அவர்களை பிரமிப்பில் ஆழ்த்துகிறது.

**கோயிலை எழுப்பித்த மன்னர் அச்சுத நாயக்கர்**

கும்பகோணத்தில் இருக்கிறது இராமஸ்வாமி கோயில். பழைமையான இந்தக் கோயிலைக் கட்டியவர் தஞ்சையை ஆண்ட ரகுநாத நாயக்கர் என்பார். இவருக்கு இராம சரிதத்தைக் கேட்பதிலும் படிப்பதிலும் பேரார்வம் இருந்தது. தினமும் தன் அவையில் ராமாயணத்தைப் படிக்கச் சொல்வாராம். பண்டிதர்கள் அந்தப் புண்ணியக் கதையைக் கேட்கும்போது மெய் சிலிர்ந்துக் கேட்பாராம். ராமாயணத்தைப் படிக்கும் பண்டிதர்களுக்குத் தன் கையாலேயே தாம்பூலம் மடித்துக்கொடுத்து மகிழ்வானாம். அதனால் இந்த மன்னனுக்கு, ‘அனுவிரத ராமகதாம்ருத சேவகன்’ என்னும் திருப்பெயர் ஏற்பட்டது என்கிறார்கள். அத்தைகய ராம பக்தர் எடுப்பித்த கோயில்தான் குடந்தை இராமஸ்வாமி கோயில்.

**கோயில் எழுப்பப்பட்ட காலம்**

தென்னக அயோத்தி என போற்றப்படும் இராமஸ்வாமி கோவில் கி.பி.1600 முதல் கி.பி.1645 வரை தஞ்சாவூரை ஆட்சி செய்த ரகுநாத நாயக்க மன்னரால் கட்டப்பட்டது.

**கோயில் உருவான வரலாறு**

இராம பக்தரான அச்சுத நாயக்கர், கும்பகோணத்திற்கு அருகிலுள்ள தாராசுரத்தில் ஒரு புனிதக் குளத்தைத் தோண்டினார். தோண்டலின் போது, குளத்தில் ஸ்ரீ இராமர் மற்றும் சீதா தேவியின் சிலைகளைக் கண்டனர். மன்னர் ஸ்ரீ இராமருக்கு ஒரு கோயில் கட்ட முடிவு செய்து, அதற்கு இராமஸ்வாமி கோயில் என்று பெயரிட்டார். கும்பகோணத்திற்கு அருகே உள்ள தாராசுரத்தில் குளம் வெட்டும்போது கிடைத்த இராமன், சீதையின் சிலைகளைத் தான் இந்த கோவிலில் பிரதிஷ்டை செய்தார் என்கிறது தல வரலாறு.

**தல வரலாறு குறித்த கதைகள்**

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

அயோத்தி மன்னர் தசரதருக்கு நீண்ட நாட்களாக புத்திரப்பேறு இல்லை. தன் குலகுரு வசிஷ்டரின் ஆலோசனையின் பேரில் அவர் புத்திரகாமேஷ்டி யாகம் செய்தார். அதன் பலனாக விஷ்ணுவே அவருக்கு குழந்தையாக அவதரித்தார். சித்திரை புனர்பூசம் நட்சத்திரம் நவமி திதி அவரது பிறந்த நாளாகும். தசரதரின் முதல் மனைவி கவுசல்யா அந்த தெய்வ மகனைப் பெற்ற புண்ணியவதி. இதையடுத்து விஷ்ணுவின் கையிலுள்ள சக்கரம் பூமிக்கு வர ஆசைப்பட்டது. அது பரதன் என்ற பெயரில், ராமன் பிறந்த மறுநாள் பூசம் நட்சத்திரத்தில், இரண்டாம் மனைவி கைகேயி வயிற்றில் அவதரித்தது. விஷ்ணு பூமிக்கு வந்த போது அவருடன் ஆதிசேஷனும் வருவேன் என அடம் பிடித்தது. தன்னை தினமும் தாங்கி தூங்க வைக்கும் சேவை புரிந்த சேஷனின் சேவையைப் பாராட்டி, விஷ்ணு அதை தன் தம்பியாக ஏற்றார். மூன்றாவது மனைவி சுமித்திரைக்கு ராமன் பிறந்த மூன்றாம் நாள் ஆயில்ய நட்சத்திரத்தில் அக்குழந்தை பிறந்தது. அதே நாளில் சுமித்திரையின் வயிற்றில் சத்ருக்கனன், விஷ்ணுவின் கையிலுள்ள சங்கின் அவதாரமாக அவதரித்தார். இவர்களில் லட்சுமணன் ராமனை மிகவும் நேசித்தார். குழந்தையாக இருந்த போது இவர் நான்காம் தொட்டிலில் கிடந்தார். ராமன் முதல் தொட்டிலில் படுத்திருந்தார். லட்சுமணக் குழந்தை அழுதது. எவ்வளவோ ஆறுதல்படுத்தியும் முடியவில்லை. அதன் கண்கள் ராமனின் தொட்டிலை நோக்கி திரும்பியிருந்ததைக் கண்ட வசிஷ்டர், ஒரே தொட்டிலில் இரண்டு குழந்தைகளையும் படுக்க வைத்தார்.

இராமனை தன் மீது தூக்கிப் போட்டுக் கொண்ட அக்குழந்தை அழுகையை நிறுத்தியது. அந்த அளவுக்கு பாசமாக இருந்தனர் இராம சகோதரர்கள். இராமன் காட்டுக்கு போன வேளையில், அதற்கு காரணமான தன் தாயை நிந்தனை செய்தவர் பரதன். மேலும், அண்ணனுக்கு பதிலாக தற்காலிக ஆட்சி நடத்திய போது, அவரது பாதுகையை சிம்மாசனத்தில் வைத்து மரியாதை செய்து வந்தார். சத்ருக்கனன் தன் அண்ணன் ராமன் மீது கொண்டிருந்த அன்பிற்கு ஈடு இணை சொல்லமுடியாது.அண்ணன் காட்டில் இருந்த போது, அங்கிருந்து தன்னால் நகர முடியாது என அந்த குட்டித்தம்பி அடம் பிடித்தார். இராமனின் ஆறுதலின் பேரிலேயே ஊர் திரும்பினான். ஒருமித்த சகோதரர்களுக்கு, ஒருமித்த சகோதரிகள் மணவாட்டிகளாக அமைந்தனர். ராமனுக்கும், லட்சுமணனுக்கும் உடன் பிறந்த சகோதரிகளான சீதையும், ஊர்மிளாவும் மனைவி ஆயினர்.

பரத சத்ருக்கனருக்கு ஜனக மன்னரின் தம்பி குசத்வஜனின் புத்திரிகளான மாண்டவியும், சுருதகீர்த்தியும் மனைவியாயினர். பல கஷ்டங் களை அனுபவித்தாலும், ஆசை வார்த்தைகள் காட்டினாலும் இந்த அன்புச் சகோதரர்களை யாராலும் பிரிக்க இயலவில்லை. பட்டாபிஷேக நாளன்று தன் தம்பிகளுடனும், எவ்வித எதிர்பார்ப்புமின்றி தனக்கு சேவை செய்த அனுமானுடனும், காட்டில் தன்னோடு கஷ்டப்பட்ட மனைவி சீதையுடனும் கொலு வீற்றிருந்தார். அயோத்தியில் மட்டுமே உள்ள இக்காட்சியை தென்னக மக்களும் காண வேண்டும் என தெற்கிலிருந்து பட்டாபிஷேக நிகழ்ச்சிக்கு சென்ற மன்னர்கள், தீர்த்த நகரும், புனித இடமும் ஆன கும்பகோணத்தில் இக் காட்சியை வடிவமைத்தனர். ஸ்ரீ ராமர், அவரது சகோதரர்களான சீதா தேவி மற்றும் அனுமன் ஆகியோருடன் சேர்ந்து வழிபாட்டாளர்களை ஆசீர்வதிப்பதால் இந்த கோயில் சிறப்பு வாய்ந்தது.

**பட்டாபிஷேக கோலம்**

கருவறையில் பட்டாபிஷேகக் கோலத்தில் ராமர், சீதை, லட்சுமணன், சத்ருகனன், அனுமார் இருக்கும் காட்சி காண்பவர்களை மெய்சிலிர்க்க வைக்கும். வடக்கு நோக்கிய கருவறையில் மூலவர் இராமரும் சீதைப்பிராட்டியும் பீடத்தில் அமர்ந்திருக்க, பரதன் குடை விரிக்க, இலக்குவன் அஞ்சலி பந்தத்துடன் நிற்க, சத்துருக்கனன் வெண்சாமரம் வீச அனுமன்

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

கையில் வீணையையும், சுவடியையும் ஏந்தியிருக்க அனைவரும் ஒன்றாக எழுந்தருளியுள்ளனர். இதனை தரிசனம் செய்தலே குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும்.

**இராமஸ்வாமி கோயில் சிற்பங்களின் அழகியல்**

எல்லா கலைகளுமே இறைத்தன்மையின் வெளிப்பாடாக இருந்தாலும், பக்திக்கும் வழிபாட்டிற்கும் அடையாளமாக விளங்குவது சிற்பக்கலைதான். நடுக்கல்லில் தொடங்கிய உருவ வழிபாடு பிற்காலத்தில் கோயிலில் திருவுருவ வழிபாடாக மாறியது. ஆயக்கலை அறுபத்தி நான்கிலும் சிறந்து விளங்கிய தமிழர்கள் சிற்பக்கலையிலும் தலை சிறந்து விளங்கினர்.

**எவ்வகைச் செய்தியும் உவமங்காட்டி**
**நுண்ணிதி னுணர்ந்த நுழைந்த நோக்கிற்**
**கண்ணுள் வினைஞர் (மதுரைக்காஞ்சி, பா. 516-518)**

எக்காட்சியினையும் தமது ஓவியத்திற்குள் கொண்டு வந்து ஒப்பிட்டுக் காட்டுவர். ஓவியர்கள் எதனையும் நுட்பமாக உணர்ந்தவர்கள். ஆழமான நோக்குடைய வர்கள் என்பது இதன் பொருள். கும்பகோணம் இராமஸ்வாமி கோயில் கும்பகோணத்தில் அமைந்துள்ள கலைச்சிறப்பு மிக்க பழைமையான வைணவ திருத்தலம். அவசியம் காணவேண்டிய அற்புதமான கோயில் இது. காரணம் கோயில் மட்டுமல்ல ஒரு சிறந்த கலைக்கூடமும் ஆகும். முன் மண்டபம் 62 தூண்களுடன் சிற்ப வேலைப்பாட்டுடன் உள்ளது. பெருமாளின் பல்வேறு அவதாரங்களும் அற்புதமாக அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு மகா மண்டபம் என்று பெயர். கோயிலின் உள் பிரகாரத்தில் இராமயணம் முழுவதும் சித்திரமாக வரையப்பட்டுள்ளன. சுமார் 200க்கு மேற்பட்ட சித்திரங்கள் வரயப்பட்டு சித்திரகூடம் சிறக்கிறது. “இக்கோயில் ஒரு சிற்பக்கூடமாகத் திகழ்கின்றது. முன் மண்டபத்தில் உள்ள தூண்களில் நல்ல வேலைப்பாடுகள் உள்ள சிற்பங்கள் திருமாலின் பல அவதாரங்களைச் சித்தரிக்கும் நிலையில் உள்ளன. இந்த முன் மண்டபம் ஒரு சிற்பக் கலைக்கூடம் என்றால் அது மிகையாகாது. இம்மண்டபத்தின் ஒவ்வொரு தூண்களிலும் நாயக்க மன்னர்களின் சிற்பக் கலை மிளிர்கிறது. ஒவ்வொன்றும் வரலாற்றுக் காட்சிகளைப் படம் பிடித்துக் காட்டுகிறது. திருமாலின் பத்து அவதாரங்களையும் ரதி மன்மதன் சிலைகளையும் இவற்றில் வடித்திருப்பது காண்போரை ஈர்க்கும் வகையில் உள்ளன.” (அருள்மிகு இராமசாமி திருக்கோயில் தல வரலாறு)

**திருவிழாக்கள்**

தெய்வத்தின் திருப்பெயரைச் சொல்லி மக்களை அழைத்து விழாக்கொண்டாடினான். புது ஆடை உடுத்தியும், இல்லையென்று வந்தவருக்கு வேண்டியவைகளைக் கொடுத்தும் தன்னுடையக் குலம் இவ்பூவுலகில் நிலைபெறச் செய்தான். சங்க காலத்தில் அழகியக் குடில்களையுடைய சிற்றூரில் எப்பொழுதும் விழாக்களைக் கொண்டாடி மகிழும் ஊராகத் திகழ்ந்தது என்கிறது குறுந்தொகை. “சாறுகொள் ஊரின் புகல்வேன் மன்ற” (குறுந்தொகை, பா. 41) இங்கு சாறு என்னும் சொல் விழாவினைக் குறித்தது. சிற்றூர் மட்டும் அல்லாது பல தரப்பட்ட மக்கள் வாழுகின்ற நகரத்திலும் விழாக்களினால் மிகுந்த ஆரவாரம் உண்டானது.

**பேர்ஊர் கொண்ட ஆர்கலி விழவின்**
**செல்வாம் செல்வாம் என்றி என்று, அன்று இவன்**
**நல்லோர் நல்ல பலவால் தில்ல (குறுந்தொகை, பா. 41)**

விழா நடைபெறும் இடத்திற்குச் சென்றால், அவ்விடத்தில் வாழுகின்ற நல்லோர்களைப் பார்க்க முடியும். அவர்களிடமிருந்து நற்சொற்களைப் பெற்று நம்முடைய வாழ்வு சிறக்க உதவும் என்கிறாள் தலைவி. பண்டையத் தமிழ் மக்கள் விழாக்களை இறைவனைத் தொடர்புப்

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

படுத்தியே நடத்தி வந்தனர். ஏதேனும் ஒரு கடவுளை முன்னிறுத்தியே விழாக்கள் கொண்டாடப்பட்டது.

**திருத்தேரோட்டம்**

11 நாட்கள் நடைபெறும் இராமநவமி பெருவிழாவில், நாள்தோறும் அனுமந்த வாகனம், இந்திர விமானம், சூரியபிரபை, சேஷ, யானை மற்றும் குதிரை வாகனம் உள்பட பல்வேறு வாகனங்களில் சாமி புறப்பாடு நடைபெறும். 9ஆம் நாள் இராமநவமி நாளில், விழாவின் முக்கிய நிகழ்வான திருத்தேரோட்டமும் நடைபெறும்.

**விடையாற்றி உற்சவம்**

விடையாற்றி உற்சவத்தில், இராமபிரானும், சீதா தேவியும் திருக்கல்யாண சேவையில், புஷ்பக விமானத்தில் புறப்பாடும் நடைபெறும்.

**மாசி மகத் திருவிழா**

பிப்ரவரி-மார்ச் மாசி மகம் திருவிழாவின் போது, ஸ்ரீ ராமரும், அன்னை சீதாவும் மகாமகம் கோயில் குளத்தில் நீராடி, பக்தர்களுக்கு தீர்த்த பிரசாதம் வழங்குகிறார்கள்.

**பவித்ர உற்சவம்**

ஜூலை மற்றும் ஆகஸ்ட்: ஆடியில் ஐந்து நாட்கள் பவித்ர உற்சவத்திற்கு அர்ப்பணிக்கப்படுகின்றன.

**கருட சேவை விழா**

ஓலை சப்பரத்தில் தங்க கருட சேவை நிகழும். மாசிமகத்தன்று ராமனும், சீதையும் மகாமக குளத்தில் எழுந்தருளி தீர்த்தம் வழங்குவர். கும்பகோணத்தில் சித்திரை மாதம் வளர்பிறையில் அமாவாசைக்கு அடுத்து வருகின்ற 3ஆவது திதியான அட்சய திருதியையில் காலையில் கருட சேவை கொண்டாடப்பெறுகிறது. கும்பகோணத்திலுள்ள சார்ங்கபாணி, சக்கரபாணி, இராமஸ்வாமி, ராஜகோபாலஸ்வாமி, வராகப்பெருமாள், வெங்கட்ராயர் அக்ரகாரம் பட்டாபிராமர், மல்லுக தெரு சந்தான கோபாலகிருஷ்ணன், நவநீதகிருஷ்ணன், புளியஞ்சேரி வேணுகோபால சுவாமி, மேலக்காவேரி வரதராஜப்பெருமாள், நவநீதகிருஷ்ணன், சோலையப்பன் தெரு ராமசுவாமி ஆகிய 12 வைணவ கோயில்களைச் சேர்ந்த உற்சவப் பெருமாள் சுவாமிகள் கருட வாகனத்தில் புறப்பட்டு பெரிய கடைத் தெருவில் ஒரே இடத்தில் எழுந்தருளுகின்றனர்.

**அரியணை அனுமன் தாங்க, அங்கதன் உடைவாள் ஏந்த**
**பரதன்வெண் குடைக விக்க இருவரும் கவரி பற்ற**
**விரை செறி கமலத் தாள்சேர் வெண்ணெய்யூர்ச் சடையன் தங்கள்**
**மரபுளோர் கொடுக்க வாங்கி, வசிட்டனே புனைந்தான் மௌலி! (கம்பராமாயணம், யுத்தகாண்டம், 4143)**

கோயில்கள் பண்பாட்டின் நிலைக்களன்களாக கலைகளின் வளர்ச்சிக்கு உதவுவனவாக- வைத்திய நிலையங்களாக ஆன்மீக பயிற்சி நிலையங்களாக கல்விச் சாலைகளாக பல் பரிணாம நிலையை தன்னகத்தே கொண்டு செயற்பட வேண்டுமென்று முதல் இயல் அறிவுறுத்துகிறது.

**முடிவுரை**

ஆலயம் என்பது இந்துக்களைப் பொறுத்த வரையில் அருளொளி வீசும் தெய்வீக நிலையங்கள். தெய்வத்தின் மறுவடிவங்கள். இறைவன் எழுந்தருளியிருக்கிற ஆலயங்களினை அதற்குரிய புனிதத்துவத்துடன்.. நவீன வகையான வசதிகளை உள்வாங்கி அதே வேளை பழைமை, பண்பாடு, பகவத் சித்தம் இவற்றை மனங்கொண்டு புனரமைத்துப் பேணி செவ்வனே வழிநடத்துவது

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

**குறிப்புகள்**

[1] அருள்மிகு இராமசாமி திருக்கோயில் தல வரலாறு .கும்பகோணம், 1998.
[2] சுப்பிரமணியன், ச .வே. *கம்பராமாயணம் மூலமும் உரையும்.* 1st ed., மணிவாசகர் பதிப்பகம், 1918.
[3] மயிலை சீனி வேங்கடசாமி. *தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்.* 1st ed., பாரி நிலையம், 1960.
[4] மாணிக்கம், அ .ஆ. *குறுந்தொகை மூலமும் உரையும்.* வர்த்தமானன் பதிப்பகம், 1999.
[5] மாணிக்கம், அ .ஆ. *மதுரைக்காஞ்சி மூலமும் உரையும்.* வர்த்தமானன் பதிப்பகம், 1999.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.